# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 144/மா/2019
ஆணை நாள்: 28.02.2020

திரு. P. பரமசிவம்,
கோயம்புத்தூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாநகராட்சி, சுங்கம், திருச்சி சாலை, எண். 16/56 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P. பரமசிவம் என்பவரது 4.9.2019 நாளிட்ட மனு 06.09.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 144/2019 என எண்ணிடப்பட்டு அறிக்கை பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் 04.09.2019 நாளிட்ட தனது முறையீட்டு மனுவில், கோயம்புத்தூர் மரநகராட்சியில் தமிழ்நாடு மாநகராட்சிகள் பொது சுகாதார சார்நிலை பணிவிதிகள் 1996-க்கு முரணாக சுகாதார அலுவலர்களுக்கு சுகாதார ஆய்வாளர் பொறுப்பினை கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது என்றும் இது விதிமுறைகளுக்கு முரணானது என்றும், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் சுகாதார அலுவலர்களுக்கு அவரவர்களுக்குரிய பணிகளை வழங்க கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்திற்கு உத்தரவிட கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 13.9.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் 10.10.2019 நாளிட்ட அறிக்கையில் அரசாணை (நிலை) எண். 182, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

(எம்.சி.5) வழங்கல் துறை, நாள் 17.12.2015 ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 5 மண்டலங்களுக்கு, 5 துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடங்களை தரம் உயர்த்தி ரூ.9300 – 34,800 + 4,500 தனி ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் 5 துப்புரவு அலுவலர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது என்றும், அம்மாநகராட்சியின் நியமனம் மற்றும் மேல்முறையீட்டு குழு தீர்மான எண். 174, நாள் 23.02.2016ன்படி துப்புரவு ஆய்வாளர்கள் 1. திரு. பி. அருணகிரி, 2. திரு. சி. சிவசேனன், 3. திரு. கே. பிச்சைமணி, 4. திரு. ஆர். ராமச்சந்திரன், 5. திரு. கே. வி. திருமால் ஆகியோர்களுக்கு மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ந.க.எண். 12614/2015 எம்.சி.3 நாள் 25.2.2016 ன்படி பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பட்டது என்றும், மேற்படி அரசாணையின்படி துப்புரவு அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்ட திரு. பி. அருணகிரி வயது முதிர்வின் காரணமாக 30.04.2019 அன்றும், திரு. சி. சிவநேசன் 30.06.2019 அன்றும் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளனர் என்றும், இக்காலி பணியிடங்களுக்கு பணி மூப்பின் அடிப்படையில் மூத்தோராக உள்ள 1. திரு. எஸ். முருகா மற்றும் 2. திரு. கே. சண்முகநாதன் ஆகிய சுகாதார ஆய்வாளர்களுக்கு பணி மூப்பு பட்டியலின்படி பதவி உயர்வின் மூலம் பணியமர்த்த ந.க.எண். 12614/2015/எம்.சி.3 நாள் 25.2.2016ன்படி நியமனக் குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981, பிரிவு 18ன்படி ஆணையர் இச்சட்டத்தின் மூலம் அல்லது இந்த சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டிருகின்ற அல்லது தம்மிடம் நிலைபெற்றிருக்கின்ற அதிகாரங்கள், கடமைகள் அல்லது அலுவலர்கள் எவற்றையேனும் ஒரு மாநகராட்சி அலுவலகப் பதவி வகிப்பவருக்கு அளிப்படைவு செய்தியிடலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், கோயம்புத்தூர் மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி சுகாதார ஆய்வாளர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகிறது என்றும், சுகாதார ஆய்வாளர்களுக்கு நிர்வாக நலன் கருதி பணியிடம் மாற்றம் செய்த போது வார்டு பணியுடன் பணி ஏற்பாட்டின் கீழ் துப்புரவு அலுவலர் (பொ) பணி வழங்கப்பட்டுள்ளது என்றும், பணி ஒதுக்கீடு முற்றிலும் பொது சுகாதார பணிகளின் நிர்வாக நலன் கருதி மட்டுமே செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 17.09.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 06.11.2019 அன்று முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தான் கோவை மாநகராட்சியில் 02.01.1988 முதல் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் அரசாணை

நிலை எண். 182, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (எம்.சி. 5) வழங்கல் துறை, நாள் 17.12.2015 ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஐந்து சுகாதார அலுவலர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டது என்றும், இப்பதவி உயர்வுக்கு சுகாதார ஆய்வாளர்களின் பணிமூப்புபட்டியலின் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவேண்டும் என்றும், ஆனால் கோயம்புத்தூர் மாநகராட்சியில் எந்த விதிகளையும் அரசு ஆணைகளையும் பின்பற்றாமலும், பணிமூப்பு பட்டியலை பின்பற்றாமலும் மாநகராட்சி ஆணையர் தன்னிச்சையாக அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் சுகாதார அலுவலர் பதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் பணிமூப்பு பட்டியலின்படி இளநிலையில் உள்ள திரு. ஆர். ராதாகிருஷ்ணன், திரு. என். லோகநாதன் மற்றும் திரு. ஆர். குணசேகரன் ஆகிய மூவருக்கும் மூன்று மண்டலங்களில் சுகாதார அலுவலர் பொறுப்பும், நகரத்தின் மைய பகுதியில் சுகாதார ஆய்வாளர் கூடுதல் பொறுப்பும், நகரத்தியின் முக்கிய வார்டு பகுதிகளில் நியமிக்கப்பட்டு வருகின்றனர் என்றும், இம்மூவரும் பணிமூப்பு அடிப்படையின்றி பணிபுரிந்து வருகிறார்கள் என்றும் பணிமூப்பு அடிப்படையில் தனக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை என்றும், பணியில் தன்னை விட இளையவருக்கு விதிகளை மீறி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும், அரசு ஆணை மற்றும் விதிகளின் படியும், பணிமூப்பு அடிப்படையிலும் சுகாதார அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் சுகாதார அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களுக்கு மறுபடியும் அவர்கள் பார்த்த சுகாதார ஆய்வாளர் பதவி கூடுதலாக வழங்கியது விதிமுறைகளுக்கு புறம்பானது என்றும், பணிமூப்பு அடிப்படையின்றி மூன்று நபர்களுக்கு விதிகளுக்கு புறம்பாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். அரசு ஆணை நகல் மற்றும் பணிமூப்பு பட்டியல் நகல் மற்றும் பொது தகவல் அலுவலரிடம் இருந்து பெறப்பட்ட 23.9.2019 நாளிட்ட கடித நகல் ஆகியவைகளை சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம் மற்றும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

இந்நேர்வில், முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார ஆய்வாளர்களுக்கு, நிர்வாக நலன் கருதி, பணி ஏற்பாட்டின்கீழ் சுகாதார அலுவலராக பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை பணியமைப்பு விதிகளுக்குட்பட்டது மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981-ன்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மாநகராட்சி

ஆணையர் கூடுதல் பொறுப்பு வழங்கியுள்ளார். எனவே, மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டு இம்முறையீட்டு மனுமீதான நடவடிக்கை கைவிடலமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. P. பரமசிவம்,
16/56, திருச்சி சாலை,
சிந்தாமணி பஸ் நிறுத்தம்,
சங்கம், கோயம்புத்தூர் 641 045.

2. ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் 641 001.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்